1990 ஏப்ரல் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு ஒரு சிறிய அறிவிப்பு. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் வரதராசன் அவர்கள், டெல்லிக்குச் சென்று வந்ததினுடைய விவரத்தை, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அவர்களும் அறிவித்தார்கள். அவர் ஒன்றும் உங்களையெல்லாம் குற்றம் சாட்டவில்லை. போன நிலைமை களைத் தெளிவுபடுத்திச் சொன்னார். இதிலே மேலும் மேலும் வாதம் தேவையா? நீங்கள் சொன்னால் நாங்கள் சொல்ல வேண்டுமென்ற வாதம் தேவைதானா? நீங்களே யோசித்துப் பாருங்கள். (குறுக்கீடு) உங்களை ஒன்றும் தனிப்பட்ட முறை யிலே குற்றம் சொல்லவில்லையே, வந்தவர்கள் இன்னார்; போனவர்கள் இன்னார் என்றுதான் சொன்னார். அதற்கப்புறம் உங்களை அவர் சொல்லவில்லை. ஒரு வரி, ஒற்றுமையாக இருந் தால் நல்லது என்ற விவரத்தைச் சொன்னார். அதற்குப் பிறகு நீங்கள் ஏன் வாதத்திலே இறங்க வேண்டும்? இது தேவைதானா என்று யோசித்துக் கொண்டு நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) ஒவ்வொன்றுக்கும் வாதம் யாரும் செய்யவில்லை. அவர் கேட் டார், இவர் அறிவிப்பைச் சொல்லிவிட்டார்; முடிந்து விட்டது. அதோடு முடித்து விடலாமே. இதிலே மேலும் வாதம் தேவை தானா என்பதை நீங்களே யோசித்துக் கொள்ளுங்கள்.

திரு. எஸ். ஆர். இராதா: தலைவர் அவர்களே, இதிலே வாதம் வேண்டாம் என்று சொல்கிற கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், அவர்கள் தொலைபேசியிலே கேட்டார் கள் என்றும், தொலைபேசியிலே கேட்கும்பொழுதே, அவர்கள் தனியாகப் பார்க்கப் போகிறார்கள் என்பதையும் நான் அவர் களிடத்திலே சொல்லியிருக்கிறேன். அதை மட்டும் நான் தெரி வித்துக் கொள்கிறேன்.

10-50 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக முதலமைச்சர் அவர்கள் முன் கூட்டி ஒரு அறிக்கையை வெளியிட்டுவிட்டார் என்றும், அதனால் முடிவு எடுத்துவிட்டோம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். கர்நாடகத்தில் இப்போது சட்டசபைக் கூட்டம் நடக்கவில்லை. எனவே அவர்களால் முன்கூட்டி அறிக்கையை விட முடியும். ஆனால் நான் சட்ட சபைக்குக் கட்டுப்பட்டவன். சட்டசபை நடைபெற்றுக் கொண் டிருக்கிற நேரத்தில் 19-ந் தேதி நடைபெற்ற பேச்சுவார்த்தை களின் விபரங்களைப் பத்திரிகைகளில் வெளியிட்டால் மறுநாள் அவையில் உரிமைப் பிரச்சினை வரும். உரிமைப் பிரச்சினை வரும் என்பதற்காக மட்டுமல்ல, இந்த சட்டமன்றத்தை மதிப்பவன் என்ற முறையிலும் இந்த அவைக்கு மரியாதை

தரவேண்டுமென்ற முறையிலும் நான் அதை அங்கே வெளியிடவில்லை. நிருபர்கள் என்னை எவ்வளவோ துருவித் துருவிக் கேட்டபோதும் கூட, சட்டமன்றத்தில்தான் அதை அறிவிப்பேன். சட்டமன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, உங்களிடத்தில் அதை அறிவிக்க இயலாது என்று நான் கூறிவிட்டேன். அதனால் அறிவிக்கவில்லை. அனைத்துக் கட்சித் தலைவர்களை அழைக்கவில்லை, சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் மாத்திரம் போதாது என்பதற்காக நான் பதில் அளிக்கவில்லை என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள்.

இந்த காவிரிப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி—கடந்த காலத்திலும் சரி, இப்போதும் சரி—சட்டமன்றத்திலே உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களையும் கலந்துபேசி, முடிவுகளை எடுப்பதையே வழக்கமாகக் கொண்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் அப்போது முன்னாள் முதலமைச்சராக இருந்த பெரியவர்கள், பெருந்தலைவர் காமராஜர் அவர்களிடத்திலும், அப்போது முதலமைச்சராக இல்லாமல் ஓய்வு பெற்றிருந்தாலும் கூட, பெரியவர் பக்தவத்சலம் அவர்களிடத்திலும், சென்று ஒவ்வொருமுறையும் கலந்து பேசி, அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தையும் கூட்டி அவர்களுடைய கருத்துக்களையும் கேட்டேன். அதைப்போல திரு. சி. எஸ். அவர்களிடம் தனிப்பட்ட முறையில் சென்று அவர்களுடைய கருத்துக்களைக் கேட்டு விவாதித்திருக்கிறேன். டெல்லிக்குச் சென்றபோதெல்லாம் திரு. கே. எல். ராவ் போன்றவர்களுடன் சந்தித்து, அங்கே என்ன பேசுவது என்று அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்திலும், பெரியவர் பக்தவத்சலம், பெருந்தலைவர் காமராஜர், திரு. சி. எஸ். அவர்களிடத்தில் எல்லாம் கலந்துகொண்டு செல்வதும் வழக்கம். அதைப்போல ஆர். வி. அவர்களிடத்திலும் கலந்து கொள்வது வழக்கம். அந்த அளவுக்கு இந்த விஷயத்தில் அதிகத் தொடர்பு கொண்டவர்களிடத்திலேயெல்லாம் எந்த அளவுக்குத் தொடர்பு கொள்ளவேண்டுமோ அந்த அளவுக்குக் கலந்து பேசியிருக்கிறேன். இப்போது எனக்கு ஏற்பட்ட புது அனுபவம், அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்திற்கு வருகின்ற பிரதிநிதிகள் தங்களுடைய கட்சித் தலைமையோடு தொடர்பு கொண்டிருப்பார்கள் என்று நான் எண்ணினேன். அந்தத் தொடர்பு சில பிரதிநிதிகளுக்கு இல்லை என்கிற உண்மை இப்போது எனக்குப் புரிகிறது. இந்த உண்மையைத்தான் நான் இப்போது தெரிந்து கொண்டிருக்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, இதுவே நல்லதல்ல. எல்லாக் கட்சிகளுக்கும் அவர்களுடைய தலைமையுடன் தொடர்பு இருக்கிறது. தொடர்போடு இருப்பார்கள்.